මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, අංක.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல 02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல: LAE/2025/33** **2025.03.31**

# உள்ளூரதிகார சபைகள் தேர்தல் - 2025.05.06

## உடற்றகுதியீனம் உள்ளவர்கள் விசேட போக்குவரத்து வசதிகளுக்காக விண்ணப்பித்தல்

2002 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்திய) சட்டத்தின் பிரதான முதன்மைச் சட்டத்தில் உட்சேர்க்கப்பட்டுள்ள 82எ(4) (ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் ஏதேனும் உடற்றகுதியீனம் காரணமாக எவரேனுமொருவர் நடந்தோ அன்றி இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையினால் அல்லது பிரதேச போக்குவரத்துச் சபையினால் அல்லது இலங்கை அரசாங்க புகையிரத திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் பொது போக்குவரத்து சேவையிலோ வாக்கெடுப்பு நிலையத்திற்குப் போய் வர முடியாதவராகவிருந்தால், அவர் வாக்கெடுப்பு நிலையத்திற்குப் போய்வரும் நோக்கத்திற்காக தனது தேர்தல் பிரதேசத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு தானோ அல்லது அவ்வாறு முடியாதிருப்பின் தனக்குப் பதிலாக வேட்பாளரொருவரல்லாத வேறொருவரோ விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

02. இந்த வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்களை மாவட்டத் தேர்தல் அலுவலகங்களில், பிரதேச செயலகங்களில், குறித்த உள்ளூரதிகார சபைப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள கிராம அலுவலர் அலுவலகங்களில் அல்லது www.elections.gov.lk இணையத் தளத்திலிருந்தும் பெற்றுக் கொள்ள முடியும். இவ்வசதியினைப் பெற்றுக்கொள்வதற்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை வாக்கெடுப்பு நடைபெறும் தினத்திற்கு 7 நாட்களுக்கு முன்னதாக, அதாவது 2025.04.29 ஆந் தேதி அல்லது அதற்கு முன்னதாக வாக்கெடுப்புப் பிரதேசம் அமைந்துள்ள உள்ளூரதிகார சபையின் தெரிவத்தாட்சி அலுவலரிடம் சமர்ப்பித்தல் சட்ட முறையான தேவையொன்றாகும் என்பதோடு, தெரிவத்தாட்சி அலுவலர் திருப்தியடைந்தால் இந்நோக்கத்திற்கென அந்நபருக்கு விசேட போக்குவரத்து வசதியினைப் பெற்றுக்கொள்ளவதற்கு அனுமதிப் பத்திரமொன்றை விநியோக்கிக்கலாம்.

03. விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் நபர் நடந்து அல்லது பொது வாகனங்களில் போக முடியாதவாறு உடற்றகுதியீனமுற்றிருப்பதன் தன்மையை விபரித்து (மேல்நாட்டு அல்லது உள்நாட்டு) பதிவு செய்யப்பட்ட வைத்தியர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட வைத்திய அத்தாட்சிப்பத்திரமொன்றின் மூலம் தமது விண்ணப்பத்தை உறுதிப்படுத்துவாரெனில், அதற்கான முடிவை மேற்கொள்ள தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு உதவியாகவிருக்கும். தன்னைப் பரிசோதித்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு ஒருவர் அரசாங்க வைத்தியரிடம் / பதிவு செய்யப்பட்ட அல்லது உதவி வைத்தியரொருவரிடம் அல்லது ஆயுர்வேத வைத்தியரிடம் விண்ணப்பிக்குமிடத்து அவரால் அவ்வைத்திய அறிக்கையினைக் கட்டணமேதுமின்றிப் பெற்றுக்கொள்ள முடியும். தனியார் வைத்தியர்களிடமிருந்து (மேல்நாட்டு அல்லது உள்நாட்டு) பெறப்படும் அறிக்கைகளில் அவ்வைத்தியரின் பெயரையும் பதிவு செய்யப்பட்ட இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும்.

04. தேர்தல் ஆணைக்குழுவினால் வலிமையிழப்பிற்கு ஆளாகியுள்ள நபர்களுக்காக விநியோகிக்கப்பட்டுள்ள பத்து வருடங்களுக்குச் செல்லுபடியாகும் வகையிலான தற்காலிக அடையாள அட்டையைத் தம்வசம் வைத்திருக்கும் ஒருவருக்கு தனது வலிமையிழப்பை உறுதிப்படுத்தக்கூடியவாறு வைத்தியரிடமிருந்து பெற்றுக் கொள்ளும் வைத்திய அறிக்கைக்குப் பதிலாக குறித்த அடையாள அட்டையின் நிழற்பிரதியைச் சமர்ப்பித்தல் போதுமானது.

சமன் ஸ்ரீ ரத்நாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்.